# சிங்கள குடியேற்ற வாதமும் ஈழத்தமிழர் மீதான பொருளாதாரப் பாதிப்புக்களும்

திரு. V. நித்தியானந்தம்
அதிதிப் புலமையாளர்
பொருளியற்துறை
யாழ். பல்கலைக்கழகம்.

தமிழர் தேசிய விழிப்புணர்வுக் கழகம்
07.08.2003

# சிங்களக் குடியேற்றவாதமும் ஈழத்தமிழர் மீதான பொருளாதாரப் பாதிப்புக்களும்

சிங்களக் குடியேற்ற நாட்டுவாதம் என்பது 1948 முதல் பல பரிமாணங்களையுடையதாக ஈழத்தமிழர் மீது திணிக்கப்பட்டு வருவதாக இருந்தாலுங்கூட பொதுநூலகக் குடியேற்ற நாட்டுச் செயற்பாட்டில் நில ஆக்கிரமிப்புத்தான் முக்கியமானதென்பதை வரலாற்றாசிரியரும் பொருளாதார வரலாற்றாசிரியரும் ஏற்றுக்கொள்கின்றனர். அதுமாத்திரமன்றி, நில ஆக்கிரமிப்பிலும் ஆக்கிரமிப்பாளர் தாம் பௌதிக நிலையில் குடியேறாத குடியேற்றங்களைவிட அவர்கள் குடியேறிய குடியேற்றங்கள் தாம் தூய காலனித்துவம் என வர்ணிக்கப்படலாம் எனக் குடியேற்ற நாட்டுவாதம் பற்றி ஆய்வு செய்த ஆய்வாளர் பலரும் குறிப்பிடுகின்றனர். உண்மையில் அவ்வாறு ஆக்கிரமிப்பாளர் பௌதிக நிலையில் குடியேறிய பிரதேசங்களையே 'குடியேற்றங்கள்' எனக் குறிக்க வேண்டுமெனவும் இவர்கள் கூறுகின்றனர். உதாரணமாக ஏங்கள்ஸ் (நுபெயடள) "சரியான குடியேற்றங்கள்" என்பவை ஐரோப்பிய சனத்தொகையாற் கைப்பற்றப்பட்டவையேயாகும் எனக் குறிப்பிட்டார். இங்கு ஐரோப்பியர் என அவர் குறிப்பிட்டாலும், அவருடைய கூற்றின் பிரதான அம்சம் யாதெனில் குடியேற்றங்களைக் கைப்பற்றினார்கள். அவற்றிற் குடியேறும் போது அவை 'சரியான குடியேற்றங்கள்' என வகைப்படுத்தப்படலாமென்பதேயாகும். ஆகவே ஆக்கிரமிப்பாளர் ஐரோப்பியராயில்லாதிருந்தாலும் கூட இந்தக் கூற்றுப் பொருந்தவே செய்யும் ஆகவே, இலங்கைத்

தீவின் வரண்ட வரலாற்றிலிருந்த ஈழத்தமிழர் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்ற நடவடிக்கைகள் வெறுமனே 'குடியேற்ற நாட்டுவாதம்' என்பதாக அன்றிக் குடியேற்ற நாட்டுவாதத்திலும் கடைகெட்ட 'குடியேறிய' குடியேற்ற நாட்டுவாதமாக விளங்கியமையைக் கண்டுகொள்ளலாம்.

இவ்வாறான குடியேற்ற நாட்டுவாதத்திற்கு ஈழத்தமிழரே தமது வளங்களின் குறைவுப் பாவனை மூலம் வழிவிட்டிருந்தனர். எனினும் இத்தகைய குறைவுப் பாவனை அல்லது அரைகுறைப் பாவனைக்கு அரசாங்கம் தகுந்த கீழ்க்கட்டுமான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்காமை தான் அடிப்படையான காரணமாயிருந்தது. அதன் முக்கியத்துவத்தை சிங்களக் குடியேற்றங்களுக்கு அரசாங்கம் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த போது, புதிய குடியேற்றங்கள் அடைந்த முன்னேற்றத்தினைக் கொண்டு தெளிவாக எடுத்துக்காட்ட முடியும். அவற்றுக்கு வேண்டிய போது இராணுவப் பாதுகாப்பை வழங்குவதற்குக் கூட அரசாங்கம் தயங்கவில்லை. 1985 இல் ஆரம்பிக்கப்பட்ட ஜனகபுர குடியேற்றத் திட்டம் அதற்கான ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## ஈழத்தமிழர் மீதான பாதிப்புக்கள்

இவ்வாறான பாதிப்புக்களை அரசியல், பொருளாதார சமூகப் பாதிப்புக்கள் எனப் பாகுபடுத்திக் கொள்ள முடியும்.

1. அரசியல் ரீதியான பாதிப்புக்கள் ஈழத்தமிழர் தமது தாயகத்தை மீட்டெடுக்கப் போராடும் ஒரு சூழலில்

மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. இவை தாயகப் பிரதேசத்தின் எல்லைகளை குறுக்குவதற்குரிய ஒரு கருவியாக அமைகின்றன. குறிப்பாகத் தமிழக எல்லைப் பகுதிகளிற் குடியேற்றங்களை நிறுவிச் சிங்களவரைக் குடியேற்றுவதன் மூலம் சமூக அமைப்பினை மாற்றித் தமிழ்ப் பிரதேசங்களைக் குறுக்க முடிந்தது.

2. இணைந்த தாயகப் பிரதேசம் வட – தென் தமிழீழ இணைப்புப் பாதிக்கப்படுதல்.
3. பிரதேச வாதம்.

## பொரளாதாரம்

1. வளங்களின் ஒருமித்த பாவனை பாதிக்கப்படுதல்.
2. வளங்களின் பாதிப்பு எல்லை வளங்கள் பாதிக்கப்பட்டமை.
3. சந்தை ஊடறுப்பு.
4. தங்கியிருக்கும் தன்மை நீடிப்பு.

## சமூகம்

1. சமூகம் துண்டாடப் படுதல்.
2. பண்பாட்டு ஊடறுப்பு.
3. முஸ்லிம் மக்கள் தொடர்பான பிரச்சினைகள்

அம்பாள் பிறின்ரேஸ், பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி.